

**சக்தி பௌண்டேஷன் - Uni5 EDUCATION**

## மஹாகவி சுப்ரமண்ய பாரதியார்

* பள்ளி மாணவர்களைக் கருத்தில் கொண்டு மஹானின் வாழ்க்கை வரலாறு இங்கே மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு அளிக்கப்படுகின்றது. இப்பாடத்தை நடத்தும் பெற்றோரும் ஆசிரியரும் பாரதியாரின் பாடல்களை இடையில் பாடினால் நலம்! மிகவும் உணர்ச்சியுடனும் சமயோசித புத்தியுடனும் இப்பாடத்தை உள்வாங்கிக் கொண்டு பாரதியாரின் வாழ்க்கையில் நாம் எங்கு நிற்கின்றோம் என்பதை மாணவர்கள் self-identification செய்து கொள்ளுதல் பலன் தரும்! மாணவர்களின் எதார்த்த வாழ்வியல் உதாரணங்களுடன் இணைத்து விளக்கம் தருக.
ஆசிரியர்கள்.

### பாடம் - 3

### எட்டயபுரத்தில் பாரதியார்

**எட்டயபுர சமஸ்தானம் எப்படி உருவானது?**

தமிழ் நாட்டைப் பிற்காலப் பாண்டியர்கள் ஆட்சி செய்த காலத்தில் சில பகைவர்கள் மதுரைக்குத் தெற்கே இருந்தார்கள். அவர்களை அடக்கி ஒடுக்க ஆந்திராவில் இருந்து ஸ்ரீகுமாரமுத்து எட்டப்பன் என்ற வீரர் உதவினார். பாண்டிய மன்னன் அவருக்கு நன்றிக்கடனாக - energy exchange ஆக சில ஊர்களைத் தந்தார்.அவ்வீரர் கங்கை கொண்டான் என்னும் சிறிய அரசனுக்கும் போரில் உதவி இன்னும் சில ஊர்களைப் பரிசாகப் பெற்று உருவாக்கிய சமஸ்தானம் தான் எட்டயபுர சமஸ்தானம். கி.பி.16ஆம் நூற்றாண்டின் கடைசியில் ஜெகவீர குமார எட்டப்பன் என்பவர் இன்று இருக்கும் சமஸ்தானத்தை முழுமையாக்கினார். இவர்கள் பின்னர் ஆங்கில அரசுக்கு உறுதுணையாக இருந்தனர். இவர்களில் ஒருவரே வீரபாண்டிய கட்ட பொம்மனை ஆங்கில அரசுக்குப் பிடித்துக் கொடுத்துக் கெட்ட பேரும் வாங்கிக் கொண்டவன்.எட்டயபுர அரண்மனை மிகவும் அழகியது.

**சமஸ்தான ராஜாக்கள் எப்படிப் பட்டவர்கள்?**

எட்டயபுரம் ராஜாக்கள் தெலுங்கு மொழியில் பேசினாலும் தமிழகத்தில்



புலம்பெயர்ந்து வாழ்ந்ததால் தமிழை நன்கு கற்றனர். பல தமிழ்ப் புலவர்கள் எட்டயபுர அரசனையில் இருந்தனர்.

எட்டயபுர அரசர்கள் சங்கீதக் கலையை விரும்பினர். கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதர் தன் கடைசி காலகட்டத்தில் எட்டயபுர ராஜாவின் ஆதரவில் அவ்வூரில் வாழ்ந்தார். அவ்வூரில் இறைவன் அடி சேர்ந்தார். ராஜாவுக்கு வர இருக்கும் துன்பத்தை அவர் அறிந்து உதவினார்.அவரது தம்பியும் அதன் பின் வந்த சந்ததியினரும் எட்டயபுர சமஸ்தானத்தின் உதவியால் வாழ்ந்தனர்.

எட்டயபுர ராஜாக்கள் ஹிந்து மதத்தின் மீது நம்பிக்கை வைத்தவர்கள். ஆனாலும் அவர்கள் இஸ்லாம் மற்றும் கிறிஸ்துவ மதங்களுக்கு மதிப்பு அளித்தனர். உமறு புலவரின் சீறாப்புராணம் என்னும் உயர்ந்த இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் எட்டயபுர சமஸ்தானத்தில் அரங்கேற்றம் ஆனது.

இந்த அரசர்கள் நவராத்ரி விழாவை மிகவும் உற்சாகத்துடன் கொண்டாடி அனைவருக்கும் பரிசளிப்பர். தங்களை அண்டி வாழ்ந்த அனைவருக்கு தேவையான பொருள் உதவி செய்தனர். ஆனால் இவர்கள் ஆங்கில அரசுக்குத் தேவையில்லாமல் ப்ரசனை தர வேண்டாம் என்று விடுதலை - சுயராஜ்யம் போன்றவற்றில் ஈடுபாடு காட்டவில்லை.இவர்களின் இந்த மெத்தெனப்போக்கை பாரதியார் பிற்காலத்தில் கண்டித்தும் கேலி செய்தும் எழுதியும் இருக்கிறார்.

இதன் காரணமானவே எப்போதும் அலங்காரமும் அழகும் மகிழ்ச்சியும் கொண்ட வாழ்க்கையையே மிகவும் நேசித்தனர்.

**சரி, பாரதியாரின் குடும்பத்துக்கும் எட்டயபுரத்துக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டது?**



சீவலப்பேரியில் பாரதியாரின் தாத்தா கடுவாய் சுப்பு ஐயர் வாழ்ந்தார் இல்லையா? அவர் தீடீரென இறந்து விட பாட்டி பாகீரதிக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. ஆனால் அம்மாவின் மனதில் இருக்கும் உயர்ந்த எண்ணப்படி தானே மக்கள் இருப்பார்கள்?

**”தாயைப் போலப் பிள்ளை, நூலைப் போலச் சேலை”** இல்லையா? அதனால் அவர் மனதில் தன் ஒரே மகன் சின்னசாமியை எப்படியும் படிக்க வைத்து ஆளாக்கி விடவேண்டும் என்ற உயர்ந்த எண்ணமும் இறைவனிடம் ப்ரார்த்தனையும் இருந்தது.எனவே சீவலப்பேரியில் இருந்து எட்டயபுரம் வந்து சில உறவினர்களின் உதவியுடன் சின்னசாமியைப் படிக்க வைத்தார்.

பாரதியாரின் அப்பாவுக்கு கணக்குப் பாடம் மிக மிக அருமையாக வந்தது. ஆசிரியர்கள் இதனால் அவரைப் புகழ்வதும் வழக்கம். அவருக்கும் தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் உண்டு.அன்னையின் வளர்ப்பில் பல வாழ்க்கை நெறிகளைக் கற்றுக் கொண்ட அவருக்கு எட்டயபுர சமஸ்தானத்தில் இறையருளால், அன்னையின் ப்ரார்த்தனையால் வேலையும் கிடைத்தது. அதைக் கொண்டு அவர் ராஜாவின் மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றார் என்றால் பாருங்களேன்!

அவ்வூரின் மணியம்[chief] ஶ்ரீராமசாமி ஐயரின் மகள் லக்ஷ்மியைக் கல்யாணம் செய்து பாரதியாரைப் பெற்றார் சின்னசாமி.

**சின்னசாமி ஐயர் - ராஜா நட்பு எப்படியோ?**

அது ஆரம்பத்தில் நம்பிக்கையின் பேரில் அமைந்த ஆழ்ந்த நட்பு. ஐயரின் மரியாதை, கல்வி, உண்மை ராஜாவை மதிக்கச் செய்தது. அதனால் தான் ஐயர் ஆரம்பித்த ஜென்னில் மில்லுக்கு இவர் 198 ஷேர்கள் வாங்கி உதவினார். பயங்கரமான பண நெருக்கடியில் பலர் ஐயரைப் பணம் கேட்டு நச்சரித்தும் ராஜா ஏதும் சொல்லவில்லை.ஆனால் பிற்காலத்தில் அதே ராஜாவுக்கு எங்கே ஐயர் மக்களின் நடுவில் தன் அளவுக்கு உயர்ந்திடுவாரோ என்ற உள் பயமும் ஏற்பட்டதாம். ஆனால் அதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை.

என்ன இருந்து என்ன? ஆங்கில அரசு ஐயரின் மில்லை முடக்கி மிக மிகக் கொடுமையான நஷ்டத்தை ஏற்படுத்தியபோது ராஜா மௌனம் சாதித்தார்.

**அரசவையின் செல்லப் பிள்ளை**

எனவே பாரதியாருக்கு மிகச் சிறிய வயதாக இருந்த போது இருந்தே சமஸ்தானத்துடன் தொடர்பு ஏற்பட்டது.

பாரதியார் படிக்காமல் விளையாட்டுப் பிள்ளையாய் இருந்த போதில் அவர் அப்பா ராஜாவை வைத்து அறிவுரை சொல்ல வைப்பார். ராஜாவோ அவரது கவித்திறனை ஊக்குவித்து விடுவார்.சின்னசாமிக்குத் தன் மகன் அரண்மனைக் கவியாவதில் விருப்பமே இல்லை.

பாரதியாரின் அறிவையும் விழிப்புணர்வையும் உணர்ந்த சில புலவர்கள் அவரைப் பற்றிய உண்மையை ராஜாவுக்கு எடுத்துக் கூற அவருக்கும் இவர் மீது மிக மதிப்பு உண்டானது.அதனால் ராஜா இவரைச் சிறிய பையன் என்று கொஞ்சாமல் மதித்தார். அவரது ஞானத்துக்கு மரியாதை செய்தார். எப்போது வேண்டுமானாலும் அரண்மனைக்கு வரும் அனுமதி அவருக்கு உண்டு. அரசவையில் பல உயர்ந்த பெரிய கவிஞர்களுடன் இவரும் தனக்கு எனக் கொடுக்கப் பட்ட இருக்கையில் அழகாக கம்பீரமாக உட்கார்ந்து கொள்வார்.

அரசவை நிகழ்ச்சிகள், புலவர்களின் இலக்கியம் அவருள் அதிக ஞானத்தையும் விழிப்புணர்வையும் உண்டாக்கியது.அதே சமயம் அவர் அவர்களின் தவறுகளையும் பயப்படாமல் துடுக்குத்தனத்துடன் சொல்லி விடுவதும் உண்டு. இதனால் அவரைப் பிடிக்காத ஜனங்களும் அரசவையில் உண்டு. ராஜா இவருக்கு அதிகம் செல்லம் கொடுப்பதாகக் குறை கூறும் கவிகளும் உண்டு.

**"பாரதி" என்ற பட்டம் எப்போது யாரால் இவருக்கு எதற்காகத் தரப்பட்டது?**

இவரது ஞானத்தையும் விழிப்புணர்வையும் உணர்ந்த ராஜாவும் சில நல்ல

மனிதர்களும் ஒரு முறை சிவஞான யோகி என்ற மஹான் முன்னிலையில் அவரது கவித்திறனையும் அறிவையும் எடுத்துக் காட்டினர். இதன் மூலம் பாரதியாருக்குள் இருக்கும் பூர்வ ஜென்ம சங்கல்பம் அவருக்குப் புலப்பட்டது. தேசத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் தேவையான பூரண அறிவை இவர் வழங்கவே பிறந்த காரணத்தையும் யோகி உணர்ந்தார்.அவருள் பராசக்தியின் ஞானக் கட்டமைப்பு - intellect pattern அதிகமாக பூர்ணத்துவம் பெற்று விளங்குவதை உணர்ந்து தன் மெய்யுணர்வில் இருந்து அதை தரிசித்து அதில் லயித்தார். அப்போது யோகியின் மெய்யுணர்வில் ஞான சக்தி சுப்ரமண்யத்தை "பாரதி" என்று அழைத்தது. பாரதி என்றால் மஹாசரஸ்வதி!அப்போது அவருக்கு வயது 11.

**"அறிவில்லாத சமூஹத்தைத் திருத்த வந்த சரஸ்வதி"** என்று தன்னை அடையாளம் காட்டிப் பேசுவது பாரதியாரின் வழக்கம்.

பட்டத்தையும் பதவியையும் பாராட்டையும் வைத்துக் கொண்டு celebrity என்ற பெயரில் உலகை உலாவரும் இக்கால மக்கள் பாரதியாரின் வாழ்க்கையை அறிந்தால் தாங்கள் பெற்ற பாராட்டை சேவைக்கு எனப் பயன்படுத்துவர்.பாரதி என்ற சுப்ரமண்யம் தன் கடைசி மூச்சு வரை தனக்கும் தன் குடும்பத்துக்கும் தேசத்துக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியிலேயே வாழ்ந்தார். சதா விழிப்புணர்வில் ஞானபாரதியாகவே வாழ்ந்தார்! அதனால் தான் அவரது ஒவ்வொரு வார்த்தையும் வேத உண்மையைக் கூறும்படி உள்ளன!நிமிடத்துக்கு எத்தனை லட்சம் சம்பாதிக்கலாம் என்று திட்டம் போடும் celebrities வறுமையும் பட்டினியும் துரத்திய போதும் தன் கொள்கையை விட்டுத் தராத மஹானை அறிந்தால் அணு அளவேனும் சேவை செய்வர்.

எவ்வித ப்ரதிபலனையும் எதிர்பாராது, தான் பெற்ற கல்வி, தகுதி, வாழ்க்கை, பணம், பதவி, வேலை, மூலம் சதா சமூஹத்தின் மேன்மைக்கு உழைக்கும் ஒவ்வொரு மனிதனும் தான் உண்மையான celebrity ஆவர். அதை உணர்த்தும் இலக்கியமே பெரிய புராணம்!அதனால் தான் பாண்டிச்சேரி வாசிகள் இவரை சித்தர் ஆக்கினர். மதராஸ் மத்திய கைலாஷ் கோயில் இவரை

"பாரதி" என்று தன் பெயரை எழுதிய போதும், அடையாளம் காட்டிச் சொன்ன போதும் கர்வம் இல்லாமல் விழிப்புணர்வில் மட்டுமே லயித்த மஹான் இவர்.

**எட்டயபுரத்து ராஜாவுக்கு பாரதி மீது இருந்த மதிப்பை விளக்க முடியுமா?**
ராஜாவுக்கு பாரதியார் சிறுவனாக இருந்த போது மிக்க அன்பும் மதிப்பும் இருந்தது. பாரதியாரைப் படிபிற்காகத் திருநெல்வேலிக்கு அவர் தந்தை அனுப்பியதை அவர்

ஏற்றுக் கொண்டார். குறிப்பாக ஆங்கிலம் கற்றுக் கொண்டு மீண்டும் தன் அரசவைக்கு வந்தால் அதன் மூலம் ஆங்கில அரசுடன் நல்ல உறவு வைத்துக் கொள்ள அது உதவும் என்ற உள்நோக்கத்தில் ராஜா சம்மதித்தார். ஆனால் பாரதியார் மீண்டும் அரசவைக்கு வர உள்ளார விரும்பினாரா? இல்லை!

**அந்த ராஜா பெயர் என்ன?**
ஸ்ரீமான் வெங்கடேசு கன்னன்

**அவர் படிப்பிற்கு உதவினாரா?**
அவரிடம் பண உதவி கேட்டு பாரதி ஒரு அழகிய கவிதை எழுதி அனுப்பினார்.24.1.1897ல் இக்கவிதையை அவர் எழுதி ராஜாவுக்கு அனுப்பி இருக்கிறார். எந்த அளவுக்கு ராஜா உதவினார் என்று தகவல் இல்லை. உதவி இருந்தால அவர் மேற்கொண்டு படித்திருப்பாரே!

**ஏன் பாரதிக்கு மீண்டும் அரசவைக்கு வர இஷ்டமில்லை?**
தன் அறிவுக்கும் திறமைக்கும் கற்பனைக்கும் அரசவையில் அவ்வளவு challenging work இல்லை என்பதே அவர் அறிந்த உண்மை. அவரால் ஒரு நொடி கூட சும்மா இருக்க முடியாது.விளையாட்டில் மிகவும் ப்ரபலமான ஒரு வீரனை ஒரு அறைக்குள் அடைத்து, ”உனக்கு எல்லா வசதிகளும் உண்டு, நீ வெறும் சும்மா இரு” என்றால் எப்படி இருக்கும்? அதே போல் தான் இவருக்கும் நிலை.

வெறும் அழகிய கவிதைகளால் நாட்டையும் ராஜாவையும் புகழ்ந்து பாடும் வேலை அவருக்கு இஷ்டம் இல்லை.

**திருநெல்வேலிக்கு 4 ஆண்டுகள் படிக்கச் சென்றவர் அப்பா இறந்தவுடன் எட்டயபுரம் திரும்பினார் என்றால் யாரை நம்பி வந்தார்?**
அவர் எப்போதும் தன் திறமையையும் தெய்வத்தையும் நம்பினார். ஆனால் வீட்டின் மூத்த மகன் என்ற நிலையில் அப்பா இல்லாத குடும்பத்தைக் காக்கும் தார்மீகக் கடமையும் பொறுப்பும் இருக்கிறதே! அதற்காகவே சமஸ்தானத்தின் உதவியை நாடினார்.ஆனால் ஆங்கிலேயர்களின் நடவடிக்கை, அதற்கு ராஜா ஒத்துழைக்கும் பாங்கு பாரதிக்குப் பிடிக்கவே இல்லை. அவர் சதா அரண்மனை வேலையை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று ப்ரார்த்தனை செய்த வண்ணம் இருந்த காரணத்தால், அப்பாவின் மறைவுக்குப் பின் காசிக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது.

**காசிக்குச் சென்ற பாரதியார் சில வருடங்கள் கழித்து மீண்டும் எட்டயபுரம்**

**வந்தாரே?**
உண்மை! காசிக்குச் சென்ற அவர் அங்கு சில ஆண்டுகள் வாழ்கிறார்.காசி அவர் வாழ்க்கையில் பல உயர்ந்த மாற்றங்களை ஏற்படுத்தியது. ஆனால் அவற்றை அவர் குடும்பம் ஏற்றுக் கொள்ளவே இல்லை. அவரும் காசியில் இருந்து தன் ஊருக்கே செல்ல ஒரு வாய்ப்பை வேண்டினார். அது மீண்டும் எட்டயபுர ராஜா மூலம் வரவே அதைப் பயன்படுத்திக் கொண்டார்.மீண்டும் தமிழகம் வந்தார், தன் மனைவியுடன் தனிக்குடித்தனம் செய்ய ஆரம்பித்தார்.

**தமிழகம் மீண்ட பாரதியாருக்கும் எட்டயபுர அரண்மனைக்கும் எந்த அளவுக்கு உறவு இருந்தது?**
எட்டயபுரம் திரும்பிய போது அடுத்த ராஜா பட்டத்துக்கு வந்திருந்தார். அவருக்கு பாரதியார் மீது மிகவும் அன்பு. அவர் வயதிலும் சின்னவர். அவருக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியும். மூன்று முறை லண்டன் போய் வந்தவர்.பாரதியாருக்கு உரிய மரியாதையை அவர் அளித்தார். குறிப்பாக ஆங்கில இலக்கிய ஆராய்ச்சிகள் பலவற்றை பாரதியாரின் துணையால் மேற்கொண்டார்.ஆங்கிலக் கவி ஷெல்லியின் கவிதைகளைப் படித்து விளக்கம் காண்பது இருவருக்கும் பிடித்த ஒன்றாம்.

**ஷெல்லி என்றால் பாரதியாருக்கு மிகவும் விருப்பமோ?**
ஆமாம்! தன் புனைப் பெயரையே இவர் "**ஷெல்லி தாஸன்**" என்றார். அதே போல் மஹாகவி காளிதாஸர் மீது மிக்க பக்தி உடையவர்.

ஆனால் பாரதியார் - சின்ன ராஜாவின் ஆழ்ந்த தோழமையை அவர் சித்தப்பாவாகிய பெரிய ராஜா அதிகம் விரும்பவில்லை. எங்கே பாரதியாருக்கு விஷேச பெருமை அரசவையில் கிடைத்து விடுமோ என்ற உள் எண்ணமும் அவருக்குள் இருந்துள்ளது.பாரதியாரைப் பிடிக்காத வயதான கவிகளும் இவருக்கு ஒத்து ஊதினர்.எனவே எட்டயபுரம் வந்த பாரதியாருக்கு அதிக மகிழ்ச்சி இல்லை.

**ஏன்? என்ன காரணம்?**
அவருக்குத் தரப்பட்ட வேலை அந்த மாதிரி! காலையில் அரண்மனைக்குச் செல்ல வேண்டும். ராஜாவுக்கு newspaper வாசிக்க வேண்டும், சதா அவருடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டே ஒரு தோழனாக வலம் வர வேண்டும். அவர் போகும் இடங்களுக்குப் போக வேண்டும். போலிச் சிரிப்பு, போலி விஸ்வாசம், போலி ஸ்துதி என காலம் கழிக்க அவர் விரும்பவில்லை.

ஆனால் அவருக்கு அரண்மனை மூலம் பணம், உணவுப் பொருள், மரியாதை

அனைத்தும் கிடைத்தது. கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாத வாழ்க்கையை வாழ முடியும். நோகாமல் நோன்பு கும்பிட்டு இருக்க முடியும். ஆனால் அதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

**பொது மக்களின் வரிப்பணம் வீணாகச் செலவு ஆவதையும், அது தனக்கு வெட்டிச் சம்பளமாக வருவதையும் அவர் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை! இதை இக்கால ப்ரபலங்கள் சிந்திக்க வேண்டும்!** எப்படியாவது அரண்மனையை விட்டு, ஊரை விட்டு வேறு இடத்துக்கு வேறு வேலை தேட மனம் சதா சங்கல்பம் செய்து கொண்டு இருந்தது.

**காசியில் இருந்து பாரதியார் எப்படி தமிழகம் வந்தார் என்று சொல்லவில்லையே?**

காசியில் சதா தனக்கு ஒரு மாற்றம் வர வேண்டும் என்று ப்ரார்த்தனை செய்தார் பாரதியார். அப்போது 1903 லண்டனில் மஹாராஜா ஏழாம் எட்வர்ட் பதவி ஏற்றுக் கொண்டதை இந்தாவில் டில்லியில் கொண்டாடினர். மிக ப்ரம்மாண்டமான விழா அது. அப்போது ஆங்கிலேயரின் தோழர்களாக இருந்த பல ராஜாக்களும் ஜமீன்களும் டில்லி வந்தனர். அவ்விழா முடிந்து எட்டயபுர ராஜாவும் மஹாரணியும் காசிக்கு வந்த போது ராணியின் அன்பாலும் ராஜாவின் அழைப்பினாலும் அதை வாய்ப்பாக ஏற்று பாரதியார் ஊர் திரும்பினார்.பல மாற்றங்களைத் தனக்குள் செய்து கொண்ட பாரதியை அவர் குடும்பத்துக்கும் பிடிக்கவில்லை. எனவே பாட்டி பாகீரதியும் சரியான காலம் பார்த்து ராஜா கூப்பிட்டவுடன் அனுப்பி விட்டார்.

**எட்டயபுரம் வேலையை அவர் குடும்பம் விரும்பியதா?**

உண்மை! ஸ்ரீமதி.செல்லமாளுக்குத் தன் கணவர் சமஸ்தானத்தில் வேலை பார்ப்பதில் சந்தோஷம். மேலும் வசதிக்கும் சாப்பாட்டுக்கும் காசுக்கும் கவலை இல்லையே!? பெரும்பாலும் பெண்களுக்கு அவை கிடைத்து விட்டால் போதுமே! அதனால் தான் அவர் வேலையை விட எண்ணிய போது அவர் மனைவி எதிர்த்தார்.அவர் ஒரு குடும்பத் தலைவி என்ற நிலையில் இருந்து வாழ்க்கையைப் பார்த்தார். இவரோ தன்னை ஒரு அவதாரமாகவும் சமூஹ மாற்ற சக்தியாகவும் அடையாளம் கண்டார். அதனால் இருவருக்கும் சதா கருத்து வேறுபாடுகள் இருந்தன.

**”ஐந்நூறு ரூபாய் கதை” என்பது என்ன?**

ஒரு முறை எட்டயபுரம் பெரிய ராஜா சென்னைக்குச் சென்றார். அக்காலத்தில், ஏன் இன்று கூட சென்னைக்கு வருவது பல ஊர் மக்களுக்கு ஒரு பெரிய விஷயம்

தான். அப்போது அவருடன் குறிப்பிட்ட சிலரை மட்டும் கூட்டுக் கொண்டார். சுற்றுலா முடிந்து ஆங்கில அரசைக் கண்டு மரியாதை செய்த பின் அவர் தன்னுடன் வந்தவர்களுக்கு ரூபாய் ஐந்நூறு [இன்று அது ரூபாய் ஐயாயிரத்துக்கு சமம்] அன்பளிப்பாக அளித்தார். அதைப் பெற்ற பலர் தம் குடும்பத்துக்குத் தேவையான பொருட்களை வாங்கினர்.அவற்றைக் கண்ட செல்லம்மாள் தன் கணவனும் அதே போல் தன் குடும்பத்துக்கு விதவிதமான சாமான்கள் வாங்கி வருவார் என்று மிக மிக எதிர் பார்த்தார்.

பாரதியாரும் ஊர் திரும்பினார். வீட்டுக்கு ஒரு குதிரை வண்டியில் வந்து இறங்கினார். வண்டிக்காரன் பல மூட்டைகளை வீட்டுக்குள் கொண்டு வைத்தார். அவை அனைத்தும் சாமான்கள் என்று மனைவி எண்ணினார்.

**உள்ளே என்ன இருந்தன தெரியுமா?**
அனைத்தும் மிகப் பழமையான வித விதமான தமிழ், ஆங்கில, ஹிந்தி, சம்ஸ்க்ருத நூல்கள். சென்னையிலும் திருநெல்வேலியிலும் பல இடங்களில் தேடி அரிய பல நூல்களை வாங்கி வந்தார். செல்லம்மாளின் நிலையை யோசித்துப் பாருங்கள்! அவர் அழுதாராம்!

**பாரதியார் ஏன் அப்படிச் செய்தார்?**
ஐந்நூறு ரூபாய் என்பது பொது மக்களின் வரிப்பணம். அதன் மூலம் தன் குடும்பம் வீண் ஆடம்பரம் செய்து கொள்ளக் கூடாது என்பதில் மிகவும் கண்டிப்பாக இருந்தார் பாரதியார். அதனால் அப்பணத்தை யாவருக்கும் பயன்படும் புத்தகங்களாக மாற்றித் தன் வீட்டில் நூலகம் அமைத்தார். அந்நூல்கள் மூலம் பெற்ற ஞானத்தைப் பின்னர் தன் எழுத்துக்களில் ப்ரதிபலித்தார்.

**இதற்கு வேறு காரணம் ஏது உண்டோ?**
அரண்மனை நூலகத்தில் வெறும் தமிழ் - தெலுங்கு இலக்கியங்கள் மட்டுமே அதிகமாக இருந்தன.அறிவை மேன்மேலும் விரிவு செய்யும் பல தரப்பட்ட புத்தகங்கள் தன் ஊரில் இல்லை என்ற உண்மை ஒன்று. அடுத்து அரண்மனைக்குள் யார் வேண்டுமானாலும் போய் விட முடியாது. எனவே தன் மூலம் தன் ஊர் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட அவர் இதைச் செய்தார்.பொது மக்கள் மூலம் கிடைத்த வரிப்பண அன்பளிப்பு புத்தகங்கள் மூலம் அதே ஜனங்களுக்கு விழிப்புணர்வு ஆயிற்று.தனக்கு என எதையும் பொதுப் பணத்தின் மூலம் வைத்துக் கொள்ள அவர் சாகும் வரை விரும்பவே இல்லை!

**எட்டயபுரத்தில் இருந்து பாரதியார் மீண்டும் ஏன்? எப்படி வேறு வேலைக்கும்**

**ஊருக்கும் சென்றார்?**
நம் மனதில் என்ன எண்ணம் இருக்கிறதோ அது தானே வாழ்க்கை? பெரிய ராஜாவுக்கோ இவர் மீது மிகப்பெரிய பிடிப்பும் மதிப்பும் இல்லை. இவருக்கோ அரண்மனை வேலையில் துளி கூட ஆர்வம் இல்லை. இந்த மனப்போராட்டங்களின் சக்தியால் ஒரு தர்மசங்கடமான சூழ்நிலை பாரதியாருக்கு ஏற்பட்டது.

**அது என்னவோ?**
ஒரு முறை பாரதியார் தன் தோழர்களுடன் பேசிக் கொண்டு இருந்தார்.

அப்போது ஒருவர், ”பாரதி! நாம் ஒரு கவிதை விளையாட்டு விளையாடுவோமா?” என்கிறார்.

”பேஷ்! பேஷ்! ஆனால் அதில் கவனம் தேவை!” - பாரதியார்.

”சரி, நாங்கள் ஒரு வாக்கியம் சொல்வோம். அவ்வாக்கியத்தைக் கொண்டு முடியும் படி நீ ஒரு கவிதை பாட வேண்டும்! இதோ எங்கள் வாக்கியம் - சாம்பலுக்கு மன்னன் சமம்”

”இல்லை! **சுடுகாட்டுச் சாம்பலுக்கு மன்னன் சமம்**”

”தோழர்களே! இந்த வாக்கியம் ப்ரச்சனையை உண்டு பண்ணும் என்று என் விழிப்புணர்வு சொல்கிறது, வேறு வாக்கியம் சொல்க!” - பாரதியார்.

”மன்னன் என்றால் பூமியில் எட்டயபுர ராஜா மட்டும் தானா? பாடு பாரதி! விளையாட்டு தானே!”

பாரதியும் வந்த வினையை ஏற்றுக் கொண்டு அழகிய கவிதை பாட, அது எப்படியோ பெரிய ராஜாவுக்குத் தெரிய வர ஒரே ப்ரச்சனை ஆகி விட்டது அரண்மனையில். பாரதி மிக மிக வருத்தம் தெரிவித்து மன்னிப்பும் கேட்டாராம்.

**பாரதியாரை அடக்கவும் பல சவால்கள் அரண்மனையில் இருந்ததாமே?**
உண்மை! பள்ளியில் குட்டிப் பசங்களுடன் பெரிய பையன்கள் மோதுவது போல இவருடன் வயதில் பெரிய பக்குவம் இல்லாத சில கவிகள் சவால்கள் விட்டனர்.

**என்ன காரணம்?**

பயம்! புதிய இளைஞன், படித்தவன், பல ஊர்களுக்கும் சென்று அனுபவம் கொண்டவன், பல மொழிகள் கற்றவன், விழிப்புணர்வு மிக்கவன், இவனால் தங்கள் பதவிக்கும் புகழுக்கும் என்ன கதி வருமோ என்ற குருட்டு பயம் தான்!

அப்படி நிகழ்ந்த ஒரு சவாலை விளக்க முடியுமா?
ஒரு நாள் காலை வேளை. அரண்மனை கூடியிக்க, சிலர்,

"பக்கத்து ஊர் சென்னிக்குளம் அண்ணாமலை முதலியார் தம் 26 வயதுக்குள்ளேயே அற்புதமான காவடிச்சிந்து இலக்கியத்தை முருகன் மீது பாடினாரே? அதைப் போல் யாரும் பாட முடியுமோ?"

பாரதியார் சூழ்நிலையை உணர்ந்து மிகவும் அமைதியாக இருக்கிறார்.

"ஏன்! 11 வயதில் "பாரதி" பட்டம் பெற்ற புலவர் ஒருவர் நம் சபையிலும் உண்டே?"

"பாரதி! உம்மாம் காவடிச்சிந்து பாட முடியுமா?" - ராஜாவின் கேள்வி இது.

"ராஜா! இறையருள் துணை புரியும்! உங்கள் அனுமதியின் பேரில் அதைச் செய்ய முடியும்!" - பாரதியாரின் பதில்.

அன்று இரவுக்குள் அவர் மிக அழகிய காவடிச்சிந்து இலக்கியத்தை எழுதி மறுநாள் ராஜா முன் பாடினார் பாரதியார். இதனால் கவிகளுக்குள் பொறாமை அதிகரித்ததே உண்மை!

**"Proclamation of stupidity" - என்று பாரதியார் ஆவேசத்துடன் ராஜாவுக்குக் கூறிய பரபரப்பான நிகழ்ச்சி தான் என்ன?**
மூன்று வருடங்களுக்கு ஒரு முறை ராஜா ஊருக்குள் குதிரை மீது அழகாக பவனி வருவார். அப்போது பெண்களைத் தவிர அனைத்துப் பொதுமக்களும் தெருவுக்கு வந்து மரியாதை செய்வது வழக்கம், செய்ய வேண்டும்.

**விடுதலைக்கான முதல் வீர வாக்கியம்!**
அப்படி இருக்கும் போது ராஜாவுக்கும் பாரதியாருக்கும் மனதளவில் பல இடர்பாடுகள் வளர்ந்த சூழலில் ஒரு முறை ராஜா ஊர்வலம் வருவதை வாங்கா என்ற ஊதுகுழல் ஊதி அறிவிக்கும் அரண்மனைப் பணியாளன் பாரதியாரின் வீட்டுக்கு அருகில் ராஜா வருவதை எடுத்துக் கூறுகிறார். அப்போது அவர் தன் மூன்று தோழர்களுடன் ஷெல்லியின் கவிதைகளைப் படித்து விளக்கிக் கொண்டு

இருக்கிறார்.சதா தன்னைக் கட்டுப்படுத்தி மரியாதைக்கு உள்ளாக்கும் போலி ராஜாவின் குணத்தை வெறுத்த பாரதியார் ராஜா கேட்கும் படி , **"Proclamation of stupidity - முட்டாள் தனத்தின் வருகையை அறிவிக்கும் அறிவிப்பு"** என்றுய் கூறினார். இதையே இவரது "முதல் விடுதலைப் போர் வாசகம்" எனலாம்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அவர் தன் நண்பர்களுக்குக் கடிதங்கள் எழுதினார். வேறு ஊர்களில் வேறு வேலை கிடைக்க வழி தேடினார். அப்போது அவர் வேண்டிய படி அவருக்கு மதுரையில் தமிழ் ஆசிரியர் பணி கிடைத்தது.

**பிற்காலத்தில் பாரதியார் எட்டயபுர ராஜாவுடன் தொடர்பு கொண்டாரா?**
தன் வாழ்க்கை முடிவதற்கு சில காலம் முன் அவர் எட்டயபுர ராஜாவுக்கு ஒரு கடிதம் எழுதி, தன் மூத்த மகளின் கல்யாணத்துக்குப் பொருள் உதவி கேட்டார். அதில் அவர், சரஸ்வதியின் அருள் பெற்ற தன் கவிதைகளை French மொழியில் அத்தேச மக்கள் மொழி பெயர்த்துப் படிக்கும் பெருமை உணர்த்தினார்.அப்படிப்பட்ட தெய்வ சக்தி கொண்ட தன் பாடல்களுக்குப் பொருள் தரம் படி வேண்டினார்.

**ராஜா உதவினாரா?**
ரூபாய் 80 தந்து உதவினார். அக்காலத்தில் அது பெரிய தொகை தான் தெரியுமா? ஆனால் ராஜா பெரிய அளவில் பாரதியாருடன் நட்பு பாராட்டவில்லை.

**என்ன காரணம்?**
பாரதியார் ஆங்கிலேயருக்கு எதிரி. அவரை ஆதரித்தால் எங்கே தன் ராஜ்ய பலம் போய் விடுமோ என்ற உள் பயமே காரணம்!

**அரண்மனையுடன் இவரது குடும்பத் தொடர்பு எப்படி இருந்தது?**
செல்லம்மாள் அரண்மனைக்குப் போக இவர் விரும்பவில்லை. அதிகம் மனதை ஆசையிலும் ஆடம்பரத்திலும் இழுக்கும் எந்த செயலுக்கும் இவர் இடம் கொடுக்கவே இல்லை.ஆனால் அரண்மனை மக்கள் இவர் மனைவி மீது அன்பு காட்டினர்.

**அரண்மனைப் பழக்கம் தந்த பலன்கள் என்னென்ன?**
அரண்மனைப் பழக்கம் அவருக்குள் விடுதலை பற்றிய ஆசையையும் தேவையையும் வேர் ஊன்றச் செய்தது. தன் ஆற்றலை அறிவை ஆக்கத்தை வெளிக்கொண்டு வரத் தூண்டியது, பாரதி பட்டம், ஸ்ரீவித்யா உபாசனை [தேவியை வழிபடும் முறை], சங்கீதம், பல் துறை அறிவுக்கு தாகம் ஆகியனவற்றை ஏற்படுத்தியது. அதே சமயம் ராஜாவின் உரவு அவருக்கு மன்னன்-மக்கள்

வேற்றுமையைக் காட்டியது. அவருக்குள் ராஜ்யம் செய்பவரின் மீதான பயத்தைப் போக்கியது, பாரத தேசத்தின் உண்மையினை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

அதே வேளையில் மிகச் சிறிய வயதில் அவரது உடல் ஆரோக்யத்துக்காக அவருக்கு ராஜா அளித்த ஒருவகையான மருந்தே பின்னர் அவருக்கு உடல் சீர்கெட்டுப் போகும் போதை வஸ்துவாக மாறியும் போனதை மறைக்க வேண்டியதில்லை.அதைப் பற்றி விரிவாகப் பின் காணலாம்.

தன் பூர்வ ஜென்மத் தொடர்பால் எட்டயபுர அரண்மனைக்கும் பாரதியாருக்கும் இருந்த உறவு மிக மிக முக்கியமானது. மிகச் சிறிய வயதில் அவருக்கு ராஜ்ய உறவு இருக்கும் அளவுக்கு சென்ற ஜென்ம புண்ணியம் இருந்தது. அதை இழப்பதால் அவர் தன் குடும்பத்தில் வறுமையை எதிர்கொள்ளத் துணிந்தார். இல்லை என்றால் மஹாகவியோ காளிதாஸனோ மஹானோ சித்தரோ தீர்க தரிசியோ தேசத் தலைவரோ எனப் போற்றும் பாரதியார் ஆயிரத்தில் ஒருவனாகவே போயிருப்பார்.

அரண்மனை தந்த பாரதி பட்டம் இவருக்கு தேச சேவையிலும் சமூஹ சீர்திருத்த காரியளிலும் ஆன்மீகத்தின் உச்சக்கட்டத்தைத் தொடுவதிலும் ஈடுபட தரப்பட்ட visa எனலாம். அதைச் சரியாக தார்மீகத்துடன் பயன்படுத்துக் கொண்டு இருக்கிறார்.

வீரபாண்டிய கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்தும், தன் போக வாழ்விற்கு வேண்டி ஆங்கிலேயருக்கு அடிமைத் தோழமைப் பட்டும் வாழ்ந்த எட்டயபுர சமஸ்தானம் இப்புலவனை ஆதரித்ததன் மூலம் தன் பாவத்தை ஓரளவு கழுவிக் கொண்டுள்ளது. வீரபாண்டியனின் வரலாற்றைப் புரட்டும் போது மனம் நோகும் எட்டயபுரம், பாரதியின் வரலாற்றில் மலர் போல பூத்துச் சிரிக்கிறது.இது காலத்தின் கட்டாயம்!

ஆங்கிலேயனுக்கு பயப்படாமல் பாரதியாரின் துணையுடன் ராஜா போராடி இருக்க முடியும். அப்படி இருந்தால் பாரத தேச விடுதலைச் சரித்திரத்தில் இன்னும் பல மாறுதல்கள் விரைவில் வந்திருக்கலாம்.

தான் பிறந்த ஊருக்குப் பெயர் தேடித் தருவது மிக உயர்ந்த பகவத் கைங்கர்யம், கடமை ஆகும். அதை எட்டயபுர பாரதி செய்தார்! அவருள் இருக்கும் விழிப்புணர்வாகிய மஹாசக்தி செய்ய வைத்தது.

**<u>எட்டயபுர ராஜாவுக்கு மஹாகவி எழுதிய முக்கிய கவிதைகள்:</u>**

1.ஸ்ரீஎட்டயபுரம் ராஜ ராஜேந்த்ர மகாராஜ வெங்கடேசு ரெட்டப்ப பூபதி அவர்கள் சமூகத்துக்கு கவிராஜ ஸ்ரீ.சி.சுப்பிரமணிய பாரதி எழுதும் சீட்டுக் கவிகள்.

பாரி வாழ்ந்து இருந்த சீர்த்திப் பழந்தமிழ் நாட்டின் கண்ணே
ஆரிய! நீ இந்நாளில் அரசு வீற்றிருக்கின்றாயால்;
காரியம் கருதி நின்னைக் கவிஞர் தாம் காண வேண்டின்
நேரில போதே எய்தி வழிபட நினைகிலாமோ?

விண்ணளவு உயர்ந்த கீர்த்தி வெங்கடேசு ரெட்ட மன்னா!
மண்ணளவு உயர்ந்தது என்பன், பாவள உயர்ந்தது என் பா;
எண்ணளவு உயர்ந்த எண்ணில் இரும்புகழ்க் கவிஞர் வந்தால்,
அண்ணலே பரிசு கோடி அளித்திட விரைகிலாயோ?

கல்வியே தொழிலாக் கொண்டாய்! கவிதையே தெய்வமாக
அல்லு நன்பகலும் போற்றி, அதை வழிபட்டு நின்றாய்!
சொல்லிலே நிகர் இல்லாத புலவர் நின் சூழல் உற்றால்
எல்லினைக் காணப் பாயும் இடபம் போல் முற்படாயோ?

[எட்டயபுரம், 1919, May - 2nd.]

கவிராஜ ஸ்ரீ.சி.சுப்பிரமணிய பாரதி எழுதும் ஓலைத் தூக்கு;
ராஜ மகா ராஜேந்த்ர ராஜகுல சேகரன் ஸ்ரீ ராஜ ராஜன்,

தேசம் எலாம் புகழ் விளங்கும் இளசை
வெங்கடேசு ரெட்ட சிங்கன் காண்க,
வாச மிகு துழாய்த் தாரான் கண்ணன் அடி
மறவாத மனத்தான், சக்தி
தாசன் எனப் புகழ் வளரும் சுப்ரமண்ய
பாரதி தான் சமைத்த தூக்கு [letter]

மன்னவனே! தமிழ் நாட்டில் தமிழ் அறிந்த
மன்னரிலை என்று மாந்தர்
இன்னலுறப் புகன்றவனை நீ மகுடம்
புனைந்த பொழு திரிந்த தன்றே!
சொன்னலமும் பொருணலமும் சுவை கண்டு,
சுவை கண்டு, துய்த்துத் துய்த்துக்

கன்னலிலே சுவை அறியும் குழந்தைகள் போல்
தமிழ்ச் சுவை நீ களித்தாய் அன்றே!

புவியனைத்தும் போற்றிடவான் புகழ் படைத்துத்
தமிழ் மொழியைப் புகழில் ஏற்றும்
கவியரசர் தமிழ் நாட்டுக்கு இல்லை எனும்
வசை என்னால் கழிந்ததன்றே!

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது,
சொல் புதிது, சோதி மிக்க
நவகவிதை, எந்நாளும் அழியாத
மா கவிதை" என்று நன்கு,

பிரான்ஸ் என்னும் சிறந்த புகழ் நாட்டில் உயர்
புலவோரும் பிறரும் ஆங்கே
விராவு புகழ் ஆங்கிலத்தீங் கவியரசர்
தாமும் மிக வியந்து கூறிப்
பராவி என்றன் தமிழ்க்கவியை மொழி பெயர்த்துப்
போற்றுகின்றார்; பாரோர் ஏத்தும்
தராதிபனே! இளசை வெங்கடேசு ரெட்டா!
நின்பால் அத்தமிழ் கொணர்ந்தேன்!

வியப்பு மிகும் புத்திசையில் வியத்தகுமென்
கவிதையினை வேந்தனே! நின்
நயப்படு சந்நிதி தனிலே நான் பாட நீ கேட்டு
நன்கு போற்றி,
ஜயப்பறைகள் சாற்றுவித்துச் சாலுகைகள் பொற் பைகள்
ஜதி பல்லக்கு,
வயப்பரிவாரங்கள் முதல் பரிசளித்துப் பல்லூழி
வாழ்க நீயே!

[எட்டயபுரம், 1919, May - 2nd]

**இக்கவிதைகள் தற்பெருமை பேசுகின்றனவா?**

இல்லை! கவிதையின் ஆரம்பத்தில் பார்! தன்னை அன்னை சக்தியின் பக்தானகவும் ஸ்ரீக்ருஷ்ணனின் சேவகனாகவும் கவி அடையாளம் காட்டித் தன்

கர்வம் தொலைக்கிறார். அதன் மூலம் மிகவும் புதுமையான கவிதையைத் தன்னுள் இருக்கும் இறைமையே தருவதாகக் கூறுவதை விழிப்புணர்வால் உணர்க.

இக்கவிதை மூலம் ராஜாவுக்குள் விழிப்புணர்வு ஏற்படுத்தவே பாரதியார் முயற்சிக்கிறார். அவர் ஆங்கில அரசின் மீது வைத்துள்ள மரியாதை பயத்தைப் போக்க இவர் முயற்சி செய்கிறார். மேலும் தன் தெய்வீகக் கவிதையை அங்கீகாரம் செய்து அதன் மூலம் ராஜா தன் SAL ENERGYயை அதிகரித்துக் கொள்வதையும் ஊக்குவித்தார். அரசன் தனக்கு மிகவும் பொருள் உதவி செய்வதற்கில்லை என்பது புலவரின் இறைமைக்கு உள்ளுணர்வில் தெரியாமலா இருக்கும்?

**இப்பகுதியை எழுதி முடிக்கும் போது ஒரு சமஸ்தானத்தையே உருவாக்கி அதைக் கட்டிக்காத்த அனுபவம் ஏற்பட்டது. பாரதியார் என்ற கவி-சித்த-யோக-பக்த-தேசாபிமான-அத்வைத்த சமஸ்தானம் அல்லவா அது?**

ஓம் சக்தி!

மதராஸ், September - 22, 2012